# பாலைக் கலிப் பாடல்களில் நிலையாமை

திரு. கி. விசாகரூபன்
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*தமிழ்த்துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

பல நூற்றாண்டு காலப் பழமை வாய்ந்த இலக்கியங்களிலே விதந்துரைக்கக் கூடிய திண்ணிய கருத்துக்கள் மிகச் செறிவாகக் காணப்படுகின்றன. இன்று தத்துவஞானிகள், உளவியலாளர்கள், முற்போக்குச் சிந்தனையாளர்கள் எனப் பலராலும் ஆராய்ந்து கூறப்படுகின்ற கருத்துக்களுக்கெல்லாம் ஊற்றுக் கால்களாகச் சங்கப் பாடல்களிலேயே கருத்துக்கள் இருந்திருக்கின்றன. இக்கருத்துக்கள் அன்றும், இன்றும், என்றும் வாழும் கருத்துக்களாயுள்ளன.

வீரத்தையும், காதலையும் பாடு பொருளாகக் கொண்டுள்ள இச் சங்க இலக்கியங்கள் பாடல் ஒழுங்கமைப்புக் கருதிப் பல திணை துறைகளாக வகுக்கப் பட்டுள்ளன. இத்தகைய் ஒரு பின்னணியிலேயே 'பாலைத் திணை' என்ற திணைப் பிரிப்பும் கூறப்படுகின்றது.

பாலைத் திணைக்கெனத் தனியான நிலம் இல்லை. 'குறிஞ்சியும் முல்லையும் முறைமையிற்றிரிந்து நடுங்கு துயருறுத்துப் பாலையென்பதோர் படிவங்கொள்ளும்' என்றே சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. எனவே, பாலையென்பது வளமற்ற, வரண்ட, துயரம் நிறைந்த பிரதேசமாகக் கூறப்படுகின்றது. இங்கு வாழ்க்கை போராட்டமாகவே இருந்திருக்க வேண்டும். வாழ்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் இல்லாதநிலையில் இந் நிலத் தலைவன், தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் செல்லும் துறைசார்ந்த பாடல்கள் அதிகம் காணப்படுகின்றன. நிலையாமைத் தத்துவச் சிந்தனைகள் சங்க இலக்கியங்களிலே பரவலாகக் காணப்பட்டாலும், அகப்பொருளில் பாலைத் திணையிலும் புறப்பொருளில் காஞ்சித் திணையிலும் செறிவாகக் காணப்படுகின்றன.[1] பாலைத்திணை சார்ந்த 36 பாடல்கள் கலித்தொகையின் நூலமைப்பிலே முதலாவது பகுதியாகக் காணப்படுகின்றன. இவை 'பாலைக்கலி'ப் பாடல்கள் எனச் சுட்டப்படுகின்றன.

இப்பாடல்கள், பெரும்பாலும் தலைவனது செலவழுங்குவித்தலையே பொருளாகக் கொண்டுள்ளன. தலைவனின் பிரிவினால் வாடும் தலைவியின் துயரம். அவள் துயருக்கு ஆறுதல் செய்யும் தோழியின் நுட்பம், தலைவனுக்குத் தோழி அறிவுறுத்தும் சந்தர்ப்பம் போன்ற சூழ்நிலைகளிலெல்லாம் நிலையாமை தொடர்பான பல கருத்தோட்டங்களைக் காணமுடிகின்றது.

அதிகளவிலான நிலையாமைக் கருத்துக்கள் இப்பாலைக் கலிப்பாடல்களில்

வெளிப்படுவதற்குக் காரணங்களுமுண்டு. பாலைத்திணையின் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன இதற்கு ஏதுவாயமைந்துள்ளன. அதாவது பிரிவுத் துன்பம் என்ற உரிப்பொருளும், நல்லியல்பு இழந்து நடுங்கு துயருறுக்கும் முதற்பொருளும், துன்பப் பின்னணியைக் கொண்டவை. பாலைத்திணை துன்பத் திணையாகவே சித்திரிக்கப்படுவதை இப்பாடல்களில் பரக்கக் காணலாம். தலைவன் பிரிந்து செல்லும் பாதையின் கொடுமை இப் பாடல்களில் பின்வருமாறு சித்திரிக்கப்படுகிறது.

உடல் உரமும் அது நிற்றற்கேற்ற உறுதியான உடம்பும், புலிப்பார்வை போலும் பார்வையும் முறுக்கிக்கட்டிய வில்லுமாய் வழிப்போவோரின் வருகையை எதிர்நோக்கிக் காத்துக்கிடப்பர் ஆறலைக் கள்வர்[2]. பெரிய காதுகளையும் பருத்த கால்களையுமுடைய மதம் பட்டு அறிவு மயங்கிய யானைக் கூட்டத்தோடு, வேறு பல வன விலங்குகளும், வழிப்பறிகாரரும் தத்தம் மனம் போன படியெல்லாம் அலைந்து திரியும்[3] பயம் நிறைந்த பாதை. மழையின்றி நீர்வற்றிப் போன வரண்ட இப்பாதையில்[4] தொலைவில் நின்று நோக்குவார் நீர்நிலை போலத் தோன்றும் கானல் நீர் தெரியும். வெப்பம் மிகுந்த[5] பிரதேசமான இப் பின்னணியிலே நிலையாமையை எடுத்தியம்பச் சங்கப் புலவருக்கு அதிக வாய்ப்புகள் இருந்திருக்கின்றன.

இவ்வகையிலமைந்த பாலைக்கலிப் பாடல்களிலே இளமை நிலையாமை, செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை போன்ற நிலையாமைத் தத்துவங்கள் அதிகமாக எடுத்தியம்பப் பட்டுள்ளன. இளமை அருமையானது, நிலையற்றது என்ற கருத்துக்களைப் பாலைக்கலிப் பாடல்கள் பற்பல வழிகளில் எடுத்துரைத்துள்ளன.

தலைவன் பொருள் தேடும் நோக்குடன் அயற்பிரதேசம் செல்கிறான். அப் பிரிவைத் தாங்கமுடியாது வருந்திய தலைவியைக் கண்ணுற்ற தோழி, அவன் செல்வதைத் தடுக்கிறாள். இத்தகைய சூழலில் காலம் கரைந்தோடும் இயல்பினது என்பதையும், இளமையையும், இளமையைத் தாங்கி நிற்கும் இவ் யாக்கையும் அழிந்துபடுவது என்பதும் உணர்த்தப்படுகிறது.[6] தலைவனானவன் தன்னை நாடி இரந்து வருவோர்க்கு இல்லையென்னாது பொருள் வழங்குவதற்காக நீண்ட காட்டுவழி செல்லும் செய்கை[7] அர்த்தமற்றதாகவே இங்கு புலப்படுத்தப்படுகிறது. அழிந்து போகும் இளமையினையும், யாக்கையினையும் பொருட்படுத்தாது, தலைவனானவன் வெயிற் கொடுமையால் இலைகள் உதிர்ந்து போக உலர்ந்து போன கொம்புகளைக் கொண்ட மரங்களையுடைய காட்டுவழி போகிறான்.[8]

இவ்வாறு மிக வருந்திச் சென்றீட்டும் பொருளும் நிலையற்றதென்பது இங்கு உணர்த்தப்படுகின்றது. பொருள் தேடிப் பிரிந்து செல்வதால் கிடைப்பது[9] காலவிரயமும், பிரிவு நீட்சியுமாகும். பொருள் இல்லாத எவரும் இவ்வுலகில் வாழாமல் மடிந்துவிடவில்லை. எனவே பொருள் தேடிப் பிரிந்து சென்று வாழ்க்கையை வீணே செலவு செய்வதை விடுத்து இணைந்து வாழ்தலே அர்த்தமுள்ளது என்று கூறப்படுகிறது. இளமை கழிந்த பின்பு வாழ்தல் பொருளற்றது. என்பதும், கழிந்துபோன இளமை மீண்டும் வராது என்பதும் பாலைக் கலிப் பாடல்களில் வெளிப்படும் மானிடர் வாழ்வியற் கருத்தாகும்.

"அரும்பொருள் வேட்கையின்
உள்ளம் துரப்ப
பிரிந்து உறை சூழாதி! –
விரும்பி நீ
என்தோள் எழுதிய
தொய்யிலும், யாழநின்
மைந்துடை மார்பில் சுணங்கும்,
நினைத்துக் காண்;
சொன்றோர் முகப்பப்
பொருளும் கிடவாது

ஒழிந்தவர் எல்லோரும்
உண்ணாதும் செல்லார்
இளமையும் காமமும்
ஓராங்குப் பெற்றார்
வளமை விளைதக்கது
உண்டோ? உள்நாள்
ஒரோஒ கை தம்முள்
தழீஇ, ஒரோஒகை
ஒன்றன் கூறு ஆடை
உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை
அரிது அரோ
சென்ற இளமை தரற்கு!
(கலி. 17: 1- 12)

என மேற்போந்த பாடலால், நாளது சின்னமாயும்; சென்ற இளமை மீண்டும் வருவதில்லை என்ற இளமையதருமையும், சொன்றோர் முகப்பப் பொருள் கிடவாது என்ற கருத்தும், அன்பின் அகலமும், அகன்ற அந்த அன்பினது அருமையுமெனப் பலவும் கூறுகின்றன.

இளமை நலத்தையும் இருவர் உள்ளமும் ஒன்றுகலந்த வழிப் பெறப்படும் உயர்ந்த காதல் இன்பத்தையும், ஒருங்கே பெற்றவர் அவ் இன்பத்தை வெறுத்துச் செல்வத்தை விரும்புமளவுக்கு அச் செல்வத்திற்கு எவ்வித மதிப்பும் இல்லை; மிகுந்த வறிய வாழ்வினை அனுபவிப்பவராயினும் பிரிவறியா வாழ்வைப் பெற்றவர் வாழ்க்கையே நல்ல வாழ்க்கை. இளமை அழிந்து விட்டால் கழிந்த அவ்விளமையைப் பெறல் அரிதிலும் அரிதெனப் பல சீரிய நிலையாமைக் கருத்துக்கள் இதனால் புலப்படுத்தப்படுகின்றன.

தலைவன் தலைவியர் சேர்ந்து வாழும் வாழ்வன்றிப் பிரிந்து நீ சென்று;

"............செய்யும் பொருளினும்
யாம் உமக்குச் சிறந்தனம்"
(கலி 4: 4—5)

எனவும்,

"செல் நவை அரவத்தும்
இணையவள் நீ நீர்ப்பின்
தன்நலம் கடைகொளப்படுதலின்
மற்று இவள்
இன்உயிர் தருதலுமாற்றுமோ
முன்னிய தேஎத்து முயன்று
செய்பொருளே."
(கலி 7: 18—22)

நீ பிரிந்து சென்று ஈட்டிவரும் பொருள் உன் பிரிவால் இறந்துபட்ட தலைவியின் உயிரை மீட்கமுடியாது என்றும் கூறப்படுகின்றது. இவ்வாறு வரும் கருத்துக்கள், செல்வம் நிலையற்றது என்பதையும், நிலையற்ற செல்வம் கடந்துபோன இளமை, அழிந்து பட்ட யாக்கை என்பனவற்றை மீட்க உதவாது என்பன போன்ற நிலையாமைத் தத்துவத்தைத் துல்லியமாக எடுத்துக் காட்டுவனவாயுள்ளன.

பொருள் தேடிக்கொள்ளும் வரையிலும் இளமையும் காதலும் நின்பால் நில்லாதது.[10]

இவற்றைத் தொடர்ந்து ஏற்படும் மூப்பும் இறப்பும் நிச்சயமானது என்பதும் உரைக்கப்படுகின்றது.

"............ காமம் புகர்பட
வேற்றுமை கொண்டு, பொருள்வயிற்
போகுவாய்;
கூற்றமும் மூப்பும் மறந்தாரோடு
ஓரா அங்கு"
(கலி. 12: 16—18)

தேடும் பொருளைத் தேடிமுடித்த செல்வத்தாலே உண்டாகும் பொருள்தான் இன்பமென்று எண்ணிப் பொருள் தேடுபவனே, பொருள் தேடிப் பிரிந்து காலத்திற்கழிந்த இளமையும், காமமும் திரும்பாது. அதுவுமற்றி இறக்கும் நாள் இது வென்று அறிந்தவர்கள் உலகில் எவருமில்லை எனவும் இப்பாடலால் கூறப்படுகின்றது.

பாலைக்கலிப் பாடல்களிலே நிலையாமைச் சிந்தனைகள் மறை பொருளாக அல்லது உய்த்தறி பொருளாகவன்றி நேரடியாகவும் உரைக்கப்பட்டுள்ளன.

''நாளினும் நெகிழ்பு ஓடும் நலன்
உடன் நிலையுமோ?''
(கலி 16: 8)

''கூற்று ஊழ்போல் குறைபடூஉம்
வாழ்நாளும் நிலையுமோ?''
(கலி 16: 12)

''முகைவாய்த்த தடம்போலும்
இளமை நிலையுமோ?''
(கலி 16: 16)

''யாறுநீர் கழிந்தந்த இளமை''
(கலி 19: 13)

என நேரிடையாகவே வரும் பாடல் அடிகளில் வாழும் நாட்களின் நிலையாமை; அழகு நிலையாமை, இளமை நிலையாமை என்பன இலக்கிய நயமுடன் விபரிக்கப்படுகின்றன.

இவ்வாறு நிலையற்றனவாகக் காணப்படும் வாழ்க்கை; அழகு; இளமை; யாக்கை; என்ற எல்லாவற்றையும் அவ்வக்காலத்தில் பயன்படுத்தாது பிரிந்து சென்று தேடும் பொருளானது இவற்றிலும் பார்க்க அதிக நிலையாமைத் தன்மையுடையது என்பதும் பாலைக்கலிப் பாடல்களில் பல இடங்களிலே வலியுறுத்தப்படுகின்றது. கேட்பவர்க்கு இன்பம் மிகுமாறு விரலால் இயக்கப்பெற்று இசை எழுப்பும் யாழ்த் தண்டில் பிணிக்கப் பெற்ற நரம்புகள் ஏழும் இனிய இசையெழுப்பும் தம் பயன்கெட்டுப் போகுமாறு இடைநின்ற நரம்பு ஒன்று திடுமென அறுந்து போவதைக் காட்டிலும் விரைந்து அழிந்து போகும் தன்மைத்தது செல்வம். இச்செல்வம் திருவினும் நிலையில்லாத் தன்மையுடையது. எனவே நிலையில்லா அப்பொருளை விரும்புதல் கூடாது.[11]

செல்வமானது நொடிப்பொழுதில் அழிந்துபடும் இயல்பினது என்று இயம்பப்படுகின்றது.

நிலையற்ற இச்செல்வம் நேர்வழியால் ஈட்டப்பெறுவதும் அவசியமென்றே கூறப்படுகின்றது. செல்வத்தைச் சேர்ப்பவர்கள் அதனை அறநெறியில் நின்று சேர்த்தல் வேண்டும். அதைமறந்து அறமல்லாத வழியில் செல்வத்தைச் சேர்த்தால் நிலையற்ற அச்செல்வம் இருபிறவியிலும் பெரும் துன்பத்தைத் தரும் எனப்படுகின்றது.

இவ்வாறு காணப்படுகின்ற இந்த நிலையாமைக் கருத்துக்கள் பழந்தமிழர் வாழ்வில் வாழ்வை அனுபவிப்பதில் விரைவுணச்சியை ஏற்படுத்தப் பயன்பட்டன எனக் கருதுவாருமுளர்.[12]

நிலையாமைக் கருத்துக்கள் ஏதோ ஒரு வகையில் அக்கால சமூக வாழ்வில் ஒழுங்கு முறையினைப் பேணப் பயன்பட்டிருக்கலாம் போலவும் தோன்றுகிறது. அதாவது;

'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'
(புறம் 55: 10)

'அறத்தாறு நுவலும் பூட்கை'
(புறம் 9: 6)

என அறத்தைப் பேணவேண்டுமென்ற கொள்கையுடைய அச்சமூகத்திற்கு சமூக ஒழுங்கைப் புகட்டுவனவாகவும். இந் நிலையாமைக் கருத்துக்கள் காணப்பட்டிருக்கலாம்.

தொகுப்பாக நோக்குகின்ற போது பாலைக்கலிப் பாடல்கள் தலைவனது பிரிவினைத் தவிர்க்கும் நோக்கிலே தலைவி; தோழி; பாணன் போன்ற அகத்திணைப் பாத்திரங்களின் கூற்றுக்களாயுள்ளன. இப்பாடல்கள் செலவைத் தவிர்ப்பதற்கான நோக்கையே பிரதானமாகக் கொண்டிருந்தன எனினும், அப்பிரிவினைத் தவிர்க்கும் இலக்கினை நிறை

வேற்ற இந்நிலையாமைக் கருத்துக்களைப் பாத்திரம் கூறுவதாகப் புலவர் பாடியிருக்கிறார். இத்தகைய சூழ்நிலையில் இக்காலத்தில் உணரப்பட்டிருந்த தத்துவச் சிந்தனைகள் பலவும் மிகப் பொருத்தமான அணிநயங்களுடன் பாடல்களாகயாக்கப்பட்டுள்ளன. செல்வம், அழகு, இளமை, வாழ்க்கை முதலானவற்றின் நிலையாமை பற்றிய முடிவான கருத்தோட்டங்களாக அன்றிலிருந்தே இவை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன எனலாம். இவ்வாறான கருத்தோட்டங்கள் கலித்தொகைக் காலத்தில் உயரிய தத்துவக் கோட்பாடுகளாகக் கருதப்பட முடியாதவையெனினும் இவை அன்றாட வாழ்வு நிகழ்ச்சிகளில் நடமாடும் மக்கள் வாழ்வினூடாகப் புலப்பட்ட சிந்தனைகளாகக் கருதப்படலாம்.

## அடிக்குறிப்புகள்

01. சத்தியமூர்த்தி. சி. : அகத்திணைகாட்டும் நிலையாமைத் தத்துவம் : கட்டுரை, பக். 01
02. கலித்தொகை ( 1958 ) மா. இராசமாணிக்கர் பதிப்பு பாடல் 3; புலியூர்கேசிகன் உரை.
03. மேலது பாடல் 4
04. மேலது பாடல் 5
05. மேலது பாடல் 6
06. கலித்தொகை ( 1995 ) இ. வை. அனந்தராமையர் பதிப்பு பக். 21
07. கலித்தொகை பாடல் 01
08. கலித்தொகை 10 : 4 - 15
09. சத்தியமூர்த்தி. சி. மு. கு. கட்டுரை
10. கலித்தொகை 12 : 12
    "இளமையும் காமமும் நின்பால் நில்லா"
11. கலித்தொகை புலியூர்கேசிகன் உரை. பக். 37
12. சத்திய்மூர்த்தி, சி. மு. கு. கட்டுரை பக். 04.

இருண்ட காலங்களில்
பாடல்கள் இருக்குமா ?
இருக்கும்
இருண்ட காலங்களைப் பற்றியதாக
இருக்கும்

— பிரெக்ட் —